# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1789/36 - 2012 දෙසැම්බර් මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.12.20

*1789/36 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் நொச்சியாகம பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

துணைத் தவிசாளர், தவிசாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் காரணமாக நொச்சியாகம பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

நொச்சியாகம பிரதேச சபையின் துணைத் தவிசாளர் திஸாநாயக்க முதியன்சேலாகே நலின் திஸாநாயக்க எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டியவருமான நொச்சியாகம பிரதேச சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65 அ(1) ஆம் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ரனவீர ஆரச்சிலாகே சமிந்த பிரதீப் ரனவீர என்பவரை பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது நொச்சியாகம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் கருணாசிங்ஹ ஜயரத்னகே சம்பத் மாதவ ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. ரனவீர ஆரச்சிலாகே சமிந்த பிரதீப் ரனவீர என்பவர், நொச்சியாகம பிரதேச சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

கே. ஜே. எஸ். மாதவ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
நொச்சியாகம பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அநுராதபுரம்,
*2012, திசெம்பர் 13.*

*1 - 171*

2 - G 17052

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கிழக்கு மாகாண மாகாண சபைக்கு தெரிவானதன் காரணமாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் அகமட் லெவ்வை முகம்மது நஸீர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டியவருமான அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65 அ(1) ஆம் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. அன்ஸில் முகம்மது அமீர் என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. அன்ஸில் முகம்மது அமீர் என்பவர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். அச்சுதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
அட்டாளைச்சேனை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை,
2012, திசெம்பர் 12.

1 - 172/1

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

துணைத் தவிசாளர், தவிசாளராக நியமிக்கப்பட்டதன் காரணமாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் துணைத் தவிசாளர் அன்ஸில் முஹம்மட் அமீர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டியவருமான அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65 அ(1) ஆம் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஆதம்லெவ்வை அமானுல்லா என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. ஆதம்லெவ்வை அமானுல்லா என்பவர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். அச்சுதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
அட்டாளைச்சேனை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை,
2012, திசெம்பர் 12.

1 - 172/ 2

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கிழக்கு மாகாண மாகாண சபைக்கு தெரிவானதன் காரணமாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

அகமட் லெவ்வை முகம்மட் நஸீர் என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் நியமிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவராக நியமிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. அப்துல் சமது முஹம்மது உவைஸ் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. அப்துல் சமது முஹம்மது உவைஸ் என்பவர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். அச்சுதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
அட்டாளைச்சேனை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை,
2012, திசெம்பர் 12.

1 - 172/3